வளர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது. வேளாண்மை மறுநிதி உதவிக் கழகம் ரூ. 137 லட்சம் மூலதனத்திற்குத் தன் பொதுவான ஒப்புதலை வழங்கியுள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, உருவாக்க இருக்கும் தென்னந்தோப்புகள் மதுரை மாவட்டத்தின் எந்தெந்தப் பகுதிகளில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது? தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் இடங்கள் எவையெவை என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவரவர்களே, மதுரை மாவட்டத்தில் மதுரை தெற்கு, மதுரை வடக்கு, மேலூர், திண்டுக்கல், திருமங்கலம், நிலக்கோட்டை, வேடசந்தூர், பழனி உசிலம்பட்டி, பெரியகுளம், உத்தமபாளையம் ஆகிய இடங்களில் பயிரிடத் திட்டம் செயல்பட இருக்கிறது.

சேலம் மாவட்டத்தில் விவசாய ஆராய்ச்சி நிலையம்

* 322 வினா—**திரு. என் கிட்டப்பா:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டத்தில் விவசாய ஆராய்ச்சி நிலையம் ஒன்று அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: சேலம் மாவட்டத்தில் தற்போது மரவள்ளிக் கிழங்கு ஆராய்ச்சி நிலையம் ஒன்று செயல்பட்டு வருகிறது.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, இம்மாதிரியான விவசாய ஆராய்ச்சி நிலையங்கள் அல்லது கூடங்களை ஒவ்வொரு மாவட்டத்திலும் ஏற்படுத்த அரசிடம் திட்டமுள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவரவர்களே, இந்த கேள்வி மரவள்ளிக் கிழங்கைப் பற்றியது. அதாவது டாபியோகா. இந்தக் கிழங்கு கடலோரப் பகுதிகளிலும், மணற்பாங்கான பகுதிகளிலும், தொளதொளப்பான சாயில்களிலும் உற்பத்தியாகிறது. சேலம் ஆராய்ச்சி நிலையத்தில் கண்டுபிடிக்கப் பட்ட எஸ். 4 ஒரு ஏக்கருக்கு 15 டன் 10 மாதங்களுக்குக் கொடுக்கிறது. ஆனால் தஞ்சை மாவட்டத்தில், களி மண்

1973 நவம்பர் 22]

பிரதேசமான அங்கே, இந்தக் கிழங்கு உற்பத்தி செய்ய முடியாது. இதை எல்லா மாவட்டங்களுக்கும் விஸ்தரிப்பது என்பது வேண்டாத ஒன்றாகும்.

திரு. தி. பொன்னுமலை : தலைவரவர்களே, தமிழகத்திலே எல்லா மாவட்டங்களையும் விட சேலம் மாவட்டத்தில் தான் எல்லாப் பொருள்களும் விளைகின்றன. மற்ற மாவட்டங்களில் கரும்பு, நெல் இந்த இரண்டும்தான் விளைகின்றன. சேலம் மாவட்டத்தில் எல்லாப் பொருள்களும் உற்பத்தி ஆகின்றன. ஆகவே, அங்கேயொரு விவசாய ஆராய்ச்சி நிலையம் ஏற்படுத்த அரசு உத்தரவு பிறப்பிக்குமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, நண்பர் அவர்கள் சொன்னது ரொம்ப காலமாகத் தமிழகத்திற்குத் தெரிந்தது. நெல்லும், கரும்பும் நிலத்திற்கு அணிகலன் என்பது பழமொழி. இது மரவள்ளிக் கிழங்கைப் பற்றிய கேள்வி. சேலம் மாவட்டத்தில் எல்லாப் பொருள்களும் விளைகிறது என்றாலும், அங்கே களிமண் பகுதியாக இருப்பதால், இந்தக் கிழங்கு விளைவிப்பது இல்லை. அங்கே ஆமணக்கு ஆராய்ச்சி நிலையம் ஒன்று செயல்பட்டு வருகிறது. பொது ஆராய்ச்சி நிலையம் ஒன்று கோவையில் இருக்கிறது.

திரு. வி. பழனிவேலு : தலைவரவர்களே, சேலம் மாவட்டத்தில் மரவள்ளிக்கிழங்கு ஆராய்ச்சிப் பண்ணை இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த ஆராய்ச்சிப் பண்ணை சர்க்காரின் பண்ணையாக இருக்கிறதா ? அதைச் சர்க்காரின் விதைப் பண்ணையாக மாற்றுவதற்கு அரசிடம் ஏதேனும் திட்டம், செயற் குறிப்பு இருக்கிறதா ? இப்போது நிலத்தைக் குத்தகைக்கு எடுத்து அதில் விவசாய ஆராய்ச்சிப் பண்ணை நடத்தி வருகிறார்கள். அதை மாற்றத் திட்டம் இருக்கிறதா ? சர்க்கார் நிலத்திலே இன்னும் பல மாதிரியான மண் வளங்கள் இருப்பதால் அதை மாற்றி அரசு பண்ணையில் ஆராய்ச்சி நடத்த உத்தேசம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, மண்வள ஆராய்ச்சி நிலையங்கள் பல்வேறு நடைபெற்று வந்துகொண்டிருக்கின்றன. ஒவ்வொன்றாக மாற்றிக்கொண்டு

[1973 நவம்பர் 22

வருகிறோம். அரசாங்க நிலத்திலும் ஆராய்ச்சி நடைபெறுகிறது, தனியார் நிலையத்திலும் ஆராய்ச்சி நடைபெற்று வருகிறது. மாறுதல் தேவையானால் செய்யப்படும்.

நகராட்சி உறுப்பினர் தொகுதிகளைப் பிரித்தமைத்தல்.

* 323 **வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நகர சபைகளில் உள்ள இரட்டை அங்கத்தினர் வார்டுகளைப் பிரித்தமைக்கும் உத்தேசம் ஏதும் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) & (இ) சட்டம் எண் 17/37-ன் படி 1920 ஆம் ஆண்டின் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் திருத்தப்பெற்று அதன்படி நகராட்சிகளில் உள்ள இரட்டை அங்கத்தினர் தொகுதிகள் முறை நீக்கப்பட்டு, ஒற்றை அங்கத்தினர் முறை அமுலுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. அடுத்த நகராட்சிகள் தேர்தலிலிருந்து இம்முறை பின்பற்றப்படும். இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

* 324 **வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் நகராட்சியில் வார்டுகளை பிரித்தமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் ஆய்விலுள்ளதா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : ஆம்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, இரட்டை மெம்பர் தொகுதிகளை ஒற்றை மெம்பர் தொகுதிகளாக மாற்றுவதற்கு உரிய அடிப்படைக் காரணம் என்ன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, எற்கனவே இது சட்டமாக ஆக்கப்பட்டு இரட்டை மெம்பர் தொகுதிகளாக இருப்பதைத் தனித் தனியாகப் பிரிக்க வேண்டு